**பத்திரிகைச் செய்தி**

**<u>சட்ட ஆட்சித்திறனைக் கட்டியெழுப்புவதற்கான உதவி பற்றி இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்திற்குமிடையே செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை</u>**

இலங்கையும் ஐக்கிய அமெரிக்க இராச்சியமும் சட்ட ஆட்சித்திறனைக் கட்டியெழுப்புவதற்கான உதவி பற்றிய உடன்படிக்கையொன்றில் இன்று (29.09.2015) கைச்சாத்திட்டுள்ளன. இப்புரிந்துணர்வு உடன்படிக்கை கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில், ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் தூதராகிய அத்துல் கேசாப் அவர்களினாலும் பதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய கலாநிதி ஹர்ஷ த சில்வா அவர்களினாலும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

2015 மே மாதத்தில் இலங்கைக்கு ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் இராஜாங்க செயலாளராகிய ஜோன் கெரி அவர்களினால் புரியப்பட்ட விஜயத்தின் போது, நிதி மோசடி, இலஞ்சம், ஊழல், போதைவஸ்துக் கடத்தல் மற்றும் ஏனைய சிக்கல் வாய்ந்த குற்றங்களையும் உள்ளடக்கி, பாரதூரமான ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றங்களை விசாரணை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள இலங்கை உத்தியோகத்தர்களுக்கு உயர்தரப் பயிற்சி வழங்குவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய மங்கள சமரவீர அவர்கள் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் உதவியை நாடியிருந்தார். இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது விசேட புலன் விசாரணை, வழக்குத் தொடர்தல் மற்றும் நீதி காணல் திறன்களில் உள்நாட்டுத் திறனைக் கட்டி எழுப்புதல், இயைபுள்ள சட்டக் கொள்கை அமைப்பு மேம்படுத்துவதற்கான தொழினுட்ப உதவி புலன் விசாரணைத் தொகுதிக்கும் நாடு கடந்த குற்றங்களை விசாரணை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அரசாங்க அதிகாரிகளின் தொழிற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும் ஏற்பாடு வழங்குகின்றது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐக்கிய அமெரிக்க இராச்சிய அரசாங்கமானது 2.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை குறித்தொதுக்கியுள்ளது. இது பாரதூரமான குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் சட்டவாட்சியை செயற்படுத்துவதற்குமான உள்நாட்டுத் திறனை அதிகரிப்பதற்கும் உதவும். இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் கீழ் இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்திற்குமிடையே நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் மற்றுமொரு மைல் கல்லாகவுள்ளது.

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**
*கொழும்பு*
*29.09.2015*